(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

நான்காம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

4th Term Examination - 2024

| | | | | |
|---|---|---|---|---|
| **வணிகக்கல்வி I**<br>**Business Studies I** | **Two Hours**<br>**Gr -13 (2024)** | **32** | **T** | **I** |

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| **வினாத்தாள் 1 இற்காக** | |
| **வினா இல** | **புள்ளிகள்** |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01) ஆதவன் என்பவர் வலைத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட மென்பாகத் (Software) தயாரிப்பினை மேற்கொண்டு வருகின்றார். மேற்படி வணிகத்தின் அடிப்படைக்கருமமாகக் கருதக்கூடியது.

(1) மென்பாக உற்பத்திகளின் விற்பனைகள் அல்லது பரிமாற்றம் இடம்பெறல்.
(2) தரமான மென்பாக உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குதல்
(3) மென்பாக உற்பத்தி தொடர்பான நுகர்வோர்களின் விருப்பங்களில் புதியவற்றை உருவாக்குதல்.
(4) மென்பாக உற்பத்தி தொடர்பாக நுகர்வோரின்வேறுபட்ட தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்.
(5) தொடர்ச்சியான அடிப்படையில் மென்பாக உற்பத்தி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல். (..........)

02) பின்வருவன வேறுபட்ட பொருளாதாரத் துறைகள் தொடர்பான சில வணிக நடவடிக்கைகள் ஆகும் இவற்றுள் சேவைத்துறையுடன் தொடர்புடைய வணிக நடவடிக்கைகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) ஆடைக்கைத்தொழில் மற்றும் துணி இறக்குமதி வியாபாரம்.
(2) கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்குட்படுத்தல் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில்.
(3) ஏற்றுமதி வியாபாரம் மற்றும் ஏற்பாட்டியல் நடவடிக்கைகளும்.
(4) எண்ணெயுடன் கூடிய பழப்பயிர்ச்செய்கை மற்றும் நிதிச்செயற்பாடுகள்
(5) கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில். (..........)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) கணினி உற்பத்தியில் ஈடுபடும் விசன் (Vision) தனியார் கம்பனியின் வணிகச்சூழல் விசைகள் தொடர்பான உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.
A. கம்பனியின் பங்குதாரர்கள்
B. IBM, Dell, Accer கணினி உற்பத்தியாளர்கள்
C. Tablet (கைக்கணினி) உற்பத்தியாளர்கள்
D. vision கம்பனியில் பணிபுரிவோர்
மேலே தரப்பட்டவற்றுள் அண்மிய(வேலை) சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) B,D (2) A,C (3) A,D (4) B,C (5) C,D (……….)

04) வணிகம் ஒன்று ஏன் சமூகப்பொறுப்பில் ஈடுபட வேண்டும் என்பதை சரியாக விளக்கும் கூற்றாக அமைவது.
(1) தற்காலத்தில் உலகிலுள்ள சகல வளங்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்துவதனால் எதிர்கால சந்ததியினருக்கு வளங்கள் அற்றுபோகும் என்பதனால் ஆகும்.
(2) வணிகம் தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினருக்கும் நன்மைபயக்கக்கூடிய விதத்தில் நல்லவை தீயவை தொடர்பாக விளங்கிச் செயற்பட வேண்டும் என்பதனாலாகும்.
(3) வணிகக் கருமங்களில் தாக்கத்தையேற்படுத்தும் காரணிகள் சூழலில் காணப்படுவதனாலாகும்.
(4) தனிப்பட்டவர்களது தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனாலாகும்.
(5) வணிகமானது சமூகம் மற்றும், சூழலிலிருந்து பொது வளங்களை பெற்று பயன்படுத்துவதனாலாகும். (……….)

05) இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் 8.5 மற்றும் 9.5 சதவீதமாக குறைக்கபட்ட நாணயக்கொள்கை கருவிகளாக அமைவது.
(1) சட்டரீதியான ஒதுக்குவீதம், நிலையான கடன் வசதி வீதம்
(2) வங்கிவட்டி வீதம், சட்டரீதியான ஒதுக்குவீதம்,
(3) நிலையான வைப்பு வசதி வீதம், நிலையான கடன் வசதி வீதம்
(4) நிலையான வைப்பு வசதி வீதம, சட்டரீதியான ஒதுக்குவீதம்
(5) நிலையான கடன் வசதி வீதம், வங்கிவட்டி வீதம் (……….)

❖ **கீழ் வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 6, 7 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
கடற்கரைகளில் கழிவு முகாமைத்துவத்திற்கென பயன்படுத்தக் கூடிய கைத்தொலைபேசி செயலி (Beach cleanup coordination App) கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலையீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

06) மேற்படி செய்தியில் காணப்படும் வணிகம் உள்ளடங்கும் வணிக அமைப்புவகையாக அமைவது.
(1) அரச கம்பனி (2) அரச கூட்டுதாபனங்கள் (3) அரச திணைக்களங்கள்
(4) கூட்டிணைக்கபட்ட கம்பனிகள் (5) பங்குடமை வணிகம் (……….)

07) மேற்படி செயற்பாட்டின் மூலம் அடைய எதிர்பார்க்கும் அபிவிருத்தியாக அமைவது.
(1) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி
(2) சமூகம் நிலைபேறான அபிவிருத்தி
(3) உள்நாட்டு பொருளாதார அபிவிருத்தி
(4) சூழல் நிலைபேறான அபிவிருத்தி
(5) வளப்பயன்பாட்டில் நிலைபேறான அபிவிருத்தி (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் சிறப்பியல்பு அல்லாதது
(1) பங்குதாரர் உச்ச எண்ணிக்கை வரையறையற்றது.
(2) இயக்குநர் உச்ச எண்ணிக்கை வரையறையற்றது.
(3) பங்கு இலாபம் செலுத்த முன் கடன் மீளச்செலுத்தும் ஆற்றலை மதிப்பிடுவது கட்டாயமாகும்.
(4) பங்குகளை பகிரங்கமாக வழங்கக் கூடியதாயிருத்தல்.
(5) பங்குச்சந்தையில் பதிவு செய்தல் கட்டாயமானது. (……….)

09) பங்குடமை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பாக பங்குடமை நிர்வாகத்தில் பிரச்சினை ஒன்று எழும் போது பின்பற்ற வேண்டிய சட்டமாக அமைவது?
(1) 1907 ஆம் ஆண்டு வரையறுத்த பங்குடமைச் சட்டம்
(2) 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்
(3) 1918 ஆம் ஆண்டு 6ம் இலக்க வணிகப் பெயர்பதிவு கட்டளைச்சட்டம்.
(4) 1840 ஆம் ஆண்டு 7ம் இலக்க மோசடி தவிர்ப்பு கட்டளைச்சட்டம்.
(5) 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச்சட்டம். (……….)

10) முயற்சியாண்மை மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் சில கீழே தரப்படுகின்றது.
A. உளத்திருப்தி கிடைக்கப்பெறல்
B. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதல்
C. சந்தைப் பங்கு விரிவடைதல்
D. நிதி சார்ந்த இலாபம் கிடைக்கப்பெறல்
E. போட்டி நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக இருத்தல்.
F. சமூகத்தில் ஏற்றுகொள்ளும் தன்மை காணப்படல்.
G. புதிய சந்தைகள் விருத்தியடைதல்
மேற் கூறப்பட்டவற்றுள் தனிநபர் அனுகூலங்களாக அமையும் விடைத்தொகுதி

(1) A,D,F (2) A,D,G (3) A,D,E (4) A,B,G (5) (D,F,G)
(……….)

11) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கான வெளிநாட்டு சந்தை வசதிகளை பெற்று கொடுக்கும். நிறுவனமாக அமைவது?
(1) தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகார சபை (NFDA)
(2) சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மை சபை.
(3) கைத்தொழில் அபிவிருத்தி சபை
(4) ஏற்றுமதி அபிவிருத்தி சபை
(5) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம் (……….)

12) வங்கிப் பணத்தின் பண்பு அல்லாதது?
(1) வணிக வங்கிகளால் உருவாக்கப்படும்.
(2) சட்டப்பணத்துடன் ஒப்பிடும் போது திரவத்தன்மை குறைந்தது.
(3) அண்மிய பணத்தினை விட கூடிய திரவத்தன்மை கொண்டது.
(4) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும்.
(5) திறைசேரி அதிகாரியின் உத்தரவின் கீழ் வெளியிடப்படும் (……….)

13) புறக்குறிப்பிடல் அவசியமில்லாத காசோலை வகை ஒன்று?
(1) காவிக் காசோலையாகும்.
(2) குறுக்கு கோடிட்ட சாசோலையாகும்.
(3) கட்டளைக் காசோலையாகும்.
(4) முற்திகதியிட்ட காசோலையாகும்.
(5) சிறப்பு முறை கோடிப்பட்ட காசோலையாகும். (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14) காப்புறுதி செய்யக் கூடிய நட்டஇடர் தொடர்பாக பிழையான கூற்றாக அமைவது?
   (1) காப்புறுதி செய்யப்படுபவர்க்கும், காப்புறுதி செய்வோருக்கும் காப்புறுத்தும் உரிமை காணப்படல் வேண்டும்.
   (2) ஏற்படும் நட்டம் வேறு காப்புறுதி செய்யக் கூடிய நட்டத்துடன் தொடர்புடையதாக இருத்தல் கூடாது.
   (3) நிச்சயமாக நடப்பவற்றிக்கு காப்புறுதி செய்ய முடியும்.
   (4) நிதி வடிவில் கணிக்கக் கூடியதாக இருத்தல்
   (5) நட்ட அச்சம் தற்செயலாக நிகழ்வதாக இருத்தல் வேண்டும். (……….)

15) தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றில் வேலைக்கு விண்ணப்பித்த இருபது பேருக்கு நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு தொலைபேசியூடாக மனிதவள முகாமையாளரால் அறிவிக்கப்பட்டது. மேற்படி நிகழ்வில் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் முறைகளை சரியாகக் காட்டும் விடையாக அமைவது?
   (1) புறரீதியான, இலத்திரனியல் சார்ந்த, வாய்மொழி மூலமான தொடர்பாடல்
   (2) அகரீதியான, இலத்திரனியல் சார்ந்த, வாய்மொழி மூலமான தொடர்பாடல்
   (3) புறரீதியான, இலத்திரனியல் சார்ந்த, எழுத்து மூலமான தொடர்பாடல்
   (4) அகரீதியான, இலத்திரனியல் சார்ந்த, எழுத்து மூலமான தொடர்பாடல்
   (5) புறரீதியான, இலத்திரனியல் சார்ந்த, சைகை மூலமான தொடர்பாடல் (……….)

16) கடந்த வருடத்தில் இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் தொடர்பாக மாணவர்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவற்றில் போக்குவரத்து தொடர்பான மிகச் சரியான கருத்தை தெரிவு செய்க.
   (1) வினைத்திறனான போக்குவரத்திற்கு எரிபொருள் மாத்திரம் போதுமானதாகும்.
   (2) துறைமுகம், விமான நிலையம், பஸ்தரிப்பிடம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் மட்டுமே வினைத்திறனான போக்குவரத்து ஏற்படும்.
   (3) பெருத்தெரு, அதிவேக நெடுஞ்சாலைகள் இல்லையெனினும் போக்குவரத்திற்கு எரிபொருள் மாத்திரமே அவசியமாகும்.
   (4) எரிபொருள் தட்டுபாடு போக்குவரத்துத் துறையை பெரிதும் பாதிப்பதில்லை.
   (5) போக்குவரத்து துறையின் முன்னேற்றத்திற்கு பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம் போன்வற்றில் சமமான முன்னேற்றம் தேவையாகும். (……….)

17) பெருமளவிலான புத்தகங்கள், எழுதுகருவிகள், களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பதிவு கூடங்களில் (Record room) உரிய உருப்படியொன்றினை இடப்படுத்தி வைப்பதற்கும், மீள எடுப்பதற்கும் இலகுவான களஞ்சியப்படுத்தல் முறையான அமைவது?
   (1) இறாக்கை முறையிலான பொதியிடல் (Pallet Racking)
   (2) பின்பக்கமாக நகர்த்தக் கூடிய இறாக்கைகள் (Push Back racks)
   (3) இரு தட்டுகளுக்கிடையில் காணப்படும் மேலதிய தட்டு (mezzanine)
   (4) தன்னியக்க களஞ்சியப்படுத்தல் முறை (Automated storage system)
   (5) பொருள்களை குவியலாக வைத்தல் (Balk storage) (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **கீழ்வரும் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு 18, 19ம் வினாக்களுக்கு விடை தருக.**

✶ ஏற்றுமதியாளரான முகுந்தன் என்பவருக்கு பொருட்களை கப்பலில் ஏற்றும் போது கப்பல் தலைவனினால் பொருட்கள்/ பழுதடைந்த நிலையில் காணப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது.

18) கப்பல் தலைவனால் முகுந்தனுக்க வழங்கப்பட்டிருப்பது?

(1) வார் நாமம் (2) தூய சுமைச் சீட்டு (3) குற்றமுடைய சுமைச் சீட்டு
(4) சுமைச் சீட்டு (5) கட்டளை (……….)

19) கப்பல் தலைவனால் முகுந்தனுக்கு வழங்கப்பட்ட பத்திரத்தில் குறிப்பிட்ட விடயங்களை நீக்கி கொள்வதற்கு முகுந்தனால் மேற்கொள்ள வேண்டியது?

(1) காப்புறுதி பத்திரம் ஒன்றினை வழங்குதல்.
(2) நட்ட ஈட்டுக் கடிதம் ஒன்றினை வழங்குதல்.
(3) உற்பத்தி நாட்டுச் சான்றிதழை வழங்குதல்.
(4) சுகநலச் சான்றிதழ் ஒன்றினை முன்வைத்தல்.
(5) நாணயக் கடிதம் ஒன்றினை வழங்குதல். (……….)

20) முகவர்களினால் வழங்கப்படும் சேவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முதல்வர் சார்பாக தனது தனிப்பட்ட பெயரில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வார்.

B - முதல்வர் சார்பில் கடனுக்கு பொருட்களை விற்பனை செய்து அக்கடன் பணத்தினை அறவிட்டுக் கொள்வார்.

C - கொள்வனவாளர், விற்பனையாளர்கள் தொடர்புபட்ட தேவையான தகவல்களை வழங்கி தரகுப்பணத்தினைப் பெற்றுக் கொள்வார்.

மேலே A, B, C மூலம் குறிக்கப்பட்ட சேவைகளை வழங்கும் முகவர்களைக் குறிப்பது.

(1) A - தரகு முகவர் B - தரகர் C - காரணிகர்
(2) A - தரகு முகவர் B - தரகர் C - ஏல விற்பனையாளர்
(3) A - தரகர் B - தரகுமுகவர் C - பொறுப்பு முகவர்
(4) A - காரணிகர் B - பொறுப்பு முகவர் C - தரகர்
(5) A - காரணிகர் B - பொறுப்பு முகவர் C - காரணிகர் (……….)

21) முகாமைத்துவ கருமங்கள் தொடர்பான இரண்டு கூற்றுகள் கீழே தரப்படுகின்றது.

A - நிறுவனமொன்றின் இலக்குகள் அல்லது நோக்கங்களைத் தீர்மானித்தலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தயாராதலும் திட்டமிடல் ஆகும்.

B - திட்டமிட்டதற்கு ஏற்ப உண்மை விளைவு இடம்பெற்றள்ளதா என்பதை அளவிட்டு, மாற்றமிருப்பின் திட்டமிடல் செயன்முறையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.


மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களில்

(1) A மாத்திரம் சரியானதாகும்.
(2) B மாத்திம் சரியானதாகும்.
(3) A, B ஆகிய இரண்டு பிழையானதாகும்.
(4) Aயும், Bயும் சரியாகும் அதேவேளை இரண்டுக்கும் இடையே தொடர்பு காணப்படுகின்றது.
(5) Aயும், Bயும் சரியாகும் அதேவேளை இரண்டுக்கும் இடையே தொடர்பு இல்லை.

(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) மேற்படி வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்தும் ஒழுங்கமைத்தல் தத்துவமாக அமைவது?




(1) கட்டளையிடல் சங்கிலி (Chain of command)
(2) கட்டுபாட்டு விசாலம் (Span of control)
(3) கட்டளையிடலின் ஒருமைப்பாடு (Unity of command)
(4) பதவி வழி வரிசை (job Hierachy)
(5) தொழில் சிறப்பு தேர்ச்சி (Job Specialization) (……….)

23) பின்வரும் அட்டவணையில் X நிரலானது தீர்மானம் எடுத்தலின் படிமுறைகளையும் Y நிரலானது உணவகம் ஒன்றுடன் இணைந்த விதத்தில் அப்படிமுறைகளுடன் தொடர்புடைய தகவல்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - பிரச்சினையை இனங்காணல் | 1. உள்ளக மற்றும் வெளிச் செல்லும் கட்டளைகளை நிறைவேற்ற வேறான பிரிவுகளை ஸ்தாபித்தல். |
| B - மாற்றுத் தீர்வுகளை இனங்காணல் | 2. உணவுக்கான கட்டளைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல். |
| C - மாற்றுத் தீர்வுகளை மதிப்பிடுதல் | 3. பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் ஆலோசனை கோருதல். |
| D - சிறந்த மாற்றுத் தீர்வைத் தெரிவு செய்தல். | 4. வாடிக்கையாளரின் கட்டளைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல். |
| E - தீர்மானத்தை அமுல்படுத்தல். | 5. பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகளை முகாமைத்துவச் செயற்குழுவில் பகுப்பாய்தல். |

X நிரலில் தரப்பட்டுள்ள தீர்மானமெடுத்தல் படிமுறையைக்கமைய Y நிரலில் உள்ள தகவல்களை இணைக்கும் போது சரியாக அமையும் விடைத் தொகுதியாக அமைவது?

(1) A - 1, B - 2, C - 4, D - 3, E – 5
(2) A - 4, B - 3, C - 5, D - 2, E – 1
(3) A - 5, B - 1, C - 4, D - 2, E – 2
(4) A - 2, B - 1, C - 3, D - 5, E - 4
(5) A - 4, B - 2, C - 3, D - 1, E – 5 (……….)

24) நிறுவனமொன்றில் உயர்மட்ட முகாமையாளர்களுக்கும், நடுத்தரமட்ட முகாமையாளருக்கும் இருக்க வேண்டிய திறன்களின் ஒப்பீடு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) உயர்மட்ட முகாமையாளர்களுக்கு, நடுத்தரமட்ட முகாமையாளரை விட கூடுலான எண்ணக்கருவாக்கத் திறன் இருத்தல் வேண்டும் என்பதுடன் தொழில்நுட்பத் திறன் கூடுதலாக இருக்க வேண்டியது முதல் வரிசை முகாமையாளர்களுக்காகும்.
(2) நடுத்தரமட்ட முகாமையாளருக்கு உயர்மட்ட முகாமையாளரை விட கூடுதலான எண்ணக்கருவாக்கர் திறனும் தொழில்நுட்பத் திறனும் இருத்தல் வேண்டும்.
(3) உயர்மட்ட முகாமையாளர்களுக்கு நடுத்தர மட்ட முகாமையாளர்களைவிட தொழிநுட்பத்திறனும், மானிடத்திறனும் இருத்தல் வேண்டும்.
(4) உயர்மட்ட முகாமையாளர்களுக்கு நடுத்தமட்ட முகாமையாளரை விட கூடுதலான மானிடத் திறன்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் எண்ணக்கருவாக்கத்திறன் கூடுதலாக இருக்க வேண்டியது நடுத்தர முகாமையார்களுக்காகும்.
(5) உயர்மட்ட முகாமையர்களுக்கும், நடுத்தரமட்ட முகாமையர்களுக்கும் எண்ணக்கருவாக்கத் திறன் தொழில்நுட்பத் திறன் ஆகிய இரண்டும் சமமாக இருத்தல் வேண்டும். (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

25) உற்பத்தி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறைகளுக்கான உதாரணங்கள் சில தரப்பட்டுகின்றது

A – விண்கலம் (Space craft)

B – வெதுப்பக உற்பத்திகள் (Baked goods)

C – வீடொன்றை சீரமைத்தல் (Home renovation)

D – கார் உற்பத்தி

E – மரத்தளபாட உற்பத்திகள் (Flat pack furniture)

F – உணவு உற்பத்தி (Food Products)

மேற்குறிப்பிட்ட உற்பத்தி முறைகளின் சரியான வகைப்படுத்தலைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

| | கட்டளை உற்பத்தி | தொகுதி உற்பத்தி | பாய்ச்சல் உற்பத்தி |
|---|---|---|---|
| (1) | B,D | E,F | A,C |
| (2) | A,C | D,F | B,E |
| (3) | A,C | B,E | D,F |
| (4) | B,E | A,C | D,F |
| (5) | B,E | D,F | A,C |

(……….)

26) மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனமொன்றிக்கு பொருத்தமான தள அமைப்புத் திட்டமாக அமைவது?

(1) உற்பத்தி பொருள் தள அமைப்பு (Product Layout)

(2) செயன்முறைத் தள அமைப்பு (Process Layout)

(3) கல/ சிறு அலகுத்தள அமைப்பு (Cellular Layout)

(4) கலப்பு தள அமைப்பு (Combination Layout)

(5) நிலையான இடத்தள அமைப்பு (Fixed Position Layout) (……….)

27) வணிகமொன்றின் ஒரு வகை உற்பத்தி பொருளான்றிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட தகவல்கள் பின்வருமாறு

விற்பனை அலகுகள் 10,000

அலகொன்றின் விற்பனை விலை ரூ 50

<u>அலகுக் கிரயம்</u>

| | |
|---|---|
| நேர் பொருட் கிரயம் ரூபா | 20 |
| நேர் கூலிக் கிரயம் ரூபா | 10 |
| மாறும் மேற்தலைகள் ரூபா | 10 |
| நிலையான மேந்தலைகள் ரூபா | 05 |
| | 45 |

மேற்குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் சமப்பாட்டு அலகுகளின் எண்ணிக்கையாக (BEP) அமைவது

(1) 10000 அலகுகள் (2) 5000 அலகுகள் (3) 8000 அலகுகள்

(4) 2500 அலகுகள் (5) 1250 அலகுகள்

(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28) தரக்கட்டுப்பாட்டிற்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்ப முறைகளில் தேசிய அல்லது சர்வதேச நியமங்களுக்கமைய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் குறிப்பது,

(1) தர நியமம் (Quality standard)

(2) பூச்சிய வழு (Zero defect)

(3) தரப்பாதுகாப்பு/ தர உறுதி (Quality Assurance)

(4) மொத்த தர முகாமைத்துவம் (Total quality management)

(5) தரவட்டம் (Quality circle) (……….)

29) உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பதிலாக சந்தைப்படுத்தக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதை முக்கியத்துவப்படுத்தும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாக அமைவது,

(1) வாடிக்கையாளர் எண்ணக்கரு (Customer concept)

(2) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (Marketing concept)

(3) உற்பத்தி எண்ணக்கரு (Production concept)

(4) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (Social Marketing concept)

(5) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு (Product concept) (……….)

30) முரண்பட்ட பண்புகளைக் கொண்ட முழுமையான சந்தையினை ஒத்த பண்புகளைக் கொண்ட குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துவதைக் குறிப்பது,

(1) இலக்கு சந்தை (Target market)

(2) சந்தையில் நிலைப்படுத்தல் (Market positioning)

(3) சந்தைப்படுத்தல் கலவை (Marketing mix)

(4) சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் (Marketing strategies)

(5) சந்தை துண்டமாக்கல் (Market segmentation) (……….)

**31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையெழுதும் போது பொருத்தமான சொல்/ சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.**

31)

(அ) நுகர்வோர் தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நிரம்பல் செய்யப்படும் பெறுமதி கொண்ட எவையும் ________________ எனப்படுதோடு, இதனை பிரதானமாக ________________, ________________ என வகைப்படுத்த முடியும்.

(ஆ) வணிகமொன்றின் மக்கட் சூழல் காரணிகளில் ________________ அதிகரிப்பு காரணமாக சந்தை தோற்றம் பெறுவதுடன், இதனுடன் ________________ அதிகரிக்கும் போது மட்டுமே வணிக விருத்தி ஏற்படுகின்றது.

32)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(அ) கழிவு முகாமைத்துவ எண்ணக்கருவிற்கமைய பழங்கள் மற்றும் காய்கறிகளின் கழிவுகளைப் பயன்படுத்தி சேதன பசளை தயாரித்தல் ____________________ ஆகக் காணப்படுவதுடன், சூழலில் அகற்றப்படும் கழிவுப் பொருட்களின் அளவினை இழிவுபடுத்துதல் __________________ ஆகும்

(ஆ) 2023 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் படி மத்திய வங்கியின் குறிக்கோள்கள் (1) ______________________ (2) ____________________ ஆகக் காணப்படுகிறது.

33)

(அ) அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு வாக்குரிமை மட்டுமே உரித்துடைய வணிகமாக _____________________ காணப்படுவதுடன் இவை ______________________ சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றது.

(ஆ) தனது கருத்து அல்லது புதிய எண்ணக்கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் _____________________ ஆகக் காணப்படுவதுடன், இவர் _____________________ இலகுவில் முகம் கொடுப்பார்.

34)

(அ) புதிய முயற்சியாளர்களின் வணிக நடவடிக்கைகளுக்கான மூலதன தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கில் செயற்படும் நிறுவனம் _____________________ ஆகக் காணப்படுவதுடன் இது நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தலில் _____________________ க்குள் உள்ளடங்கும்.

(ஆ) காப்புறுதி ஒப்பந்தங்களினை பிரதானமாக (1) ___________________________ (2) _________________________ என வகைப்படுத்த முடிவதுடன், காப்புறுதி கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தலுக்கென _________________________________ உருவாக்கப்பட்டது.

35)

(அ) கிரயம் தொடர்பில் அனுகூலமான போக்குவரத்து முறையாகக் _____________________ காணப்படும் அதே வேளை ____________________ தொடர்பில் அனுகூலமானது தெரு போக்குவரத்து ஆகும்.

(ஆ) மூலப்பொருட்களை _____________________ இருந்து கொள்வனவு செய்வது தொடக்கம் _________________________ செய்யப்படும் வரையான அசைவுகள் உள்நோக்கிய ஏற்பாட்டியல் எனப்படும்.

36)

(அ) கொள்வனவாளர்க்கும், விற்பனையாளரொருவருக்கும் இடையே உற்பத்திப் பொருட்கள், சேவைகளது _____________________ பரிமாற்றம் செய்யும் செயல்முறை ____________________ எனப்படும்.

(ஆ) இலங்கையில் மிகவும் பிரபலமான இணைய வழி மூலமான சில்லறை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உதாரணமாக ___________________, ____________________ என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

37)

(அ) அமைப்பொன்று நீண்ட காலத்தினுள் அடைந்து கொள்வதற்கான எதிர்பார்ப்புக்களே ______________________ ஆகும். இதன் மூலம் நிறுவனத்தின் (1)______________________, (2)______________________ மேலும் விபரிக்கப்படும்.

(ஆ) தனக்கு கீழ் வேலை செய்யும் உதவியாளர்களுக்கு கூடிய சுதந்திரத்தை வழங்கும் தலைவர் ______________________ என அழைக்கப்படுவதோடு ______________________கொண்ட உதவியாளர்கள் காணப்படும் போதே அத்தலைமைத்துவப் பாங்கு வெற்றியளிக்கும்.

38)

(அ) சமமட்ட பதவிகளிலுள்ளவர்களுக்கிடையே இடம்பெறுகின்ற தொடர்பாடல் ______________________ ஆவதுடன், ______________________ தொடர்பாடல் அமைப்பு பதவிகளின் மேலிருந்து கீழாகவும் கீழிலிருந்து மேலாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) இருப்பு மட்டங்களை கணிப்பிடும் போது காலப்பகுதிக்குரிய பொருள் நுகர்வு ______________________, ______________________ என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

39)

(அ) ______________________ , ______________________ போன்ற இரு கிரயங்களின் கூட்டுத்தொகை மொத்தக் கிரயம் காணப்படும்.

(ஆ) உச்ச இருப்பு மட்டத்தை கணிப்பிடுவதற்கான பின்வரும் சமன்பாட்டை பூரணப்படுத்துக.

உச்ச இருப்பு மட்டம் = ________A________ - (இழிவு இருப்பு பயன்பாடு x இழிவு கட்டளைக் காலம்) + ______B__________

40)

(அ) நிறுவனமொன்று தனக்குரிய இணையத்தளம், முகநூல் போன்ற ஊடகங்களினூடாக வெளியிடுகின்ற அறிவித்தல்கள் ________________ எனப்படுவதோடு ஏதாவது தொகையொன்றை செலுத்தி வெளியிடப்படுகின்ற விளம்பரங்கள் ________________ எனப்படும்.

(ஆ) சந்தைப்படுத்தல் சூழலானது (1) ________________ (2) ________________என இரு வகைப்படும்.

❖ **41 – 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

41) சிறப்புத் தேர்ச்சியின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) ______________________________________________

(2) ______________________________________________

(3) ______________________________________________

(4) ______________________________________________

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

42) வணிகமொன்றினால் சமூகப்பொறுப்பு நிறைவேற்ற வேண்டிய தரப்பினர்களைக் குறிப்பிடுக.

(1) ____________________

(2) ____________________

(3) ____________________

(4) ____________________

43) அரசின் பொருளாதார நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) ____________________

(2) ____________________

(3) ____________________

(4) ____________________

44) அரச கூட்டுத்தாபனங்களின் பண்புகள் நான்கு தருக.

(1) ____________________

(2) ____________________

(3) ____________________

(4) ____________________

45) பணத்தின் கருமங்கள் நான்கு தருக.

(1) ____________________

(2) ____________________

(3) ____________________

(4) ____________________

46) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் குறிப்பிடுக.

(1) ____________________

(2) ____________________

(3) ____________________

(4) ____________________

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

47) கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையில் தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

48) மையப்படுத்தலின் அனுகூலங்கள் நான்கு தருக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

49) இருப்புக் கட்டுப்பாட்டு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

50) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் நான்கு கூறுகளையும் குறிப்பிடுக.

(1) ______________________________

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

நான்காம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

FWC

## 4th Term Examination - 2024

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வி - II<br>Business Studies - II | Three Hours 10 Min.<br>Gr -13 (2024) | 32 | T | II |

- ❖ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
- ❖ ***அறிவுறுத்தல்கள்:***
  ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – II

***(01)*** பூஞ்சோலைக் கிராமத்தில் வசிக்கும் உணவு தயாரிப்பு தொடர்பான டிப்ளோமா பட்டம் பெற்ற ரமணன் என்பவர் தற்போதைய இயற்கை உணவு வகைகளை நாடிச் செல்லும் நுகர்வோர் சுவை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு "அன்னபூரணி உணவகம்" என்றும் பெயரில் அருகிலுள்ள நகரத்தில் பத்து ஊழியர்களை வேலைகமர்த்தி வணிகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். வேறுபட்ட வருமான மட்டத்தினருக்கேற்ப உணவு வகைகளை தயாரித்தது மட்டுமன்றி, இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளை பயன்படுத்தினார். இவர் வாடிக்கையாளர் அதிக நேரம் காத்திருக்காத வகையில் விநியோகத்திற்கென வேறு வேறான பகுதிகளை உருவாக்கி நவீன தொழிநுட்பங்களின் உதவியுடன் வாடிக்கையாளர் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்தார். மேலும் உணவுப் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்தலின் ஒரு பகுதியாக கமுகு மட்டையில் தயாரிக்கப்பட்ட பொதியிடல் பொருட்களை பயன்படுத்தினார்.

i) அ) மேற்படி சம்பவத்திலிருந்து இனங்காணக் கூடிய பலம், வாய்ப்பு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

ஆ) அன்னபூரணி உணவகத்தினை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

a) உரிமை　　　b) உற்பத்தித்துறை

c) நோக்கம்　　　d) உற்பத்தித்தன்மை

இ) மேற்படி சம்பவத்திலிருந்து இனங்காணக் கூடிய பேரினச்சூழல் காரணிகள் இரண்டினை உதாரணம் மூலம் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

ii) அ) ரமணன் வணிகத்தினால் மேற்கொள்ளப்படும் அடிப்படைக்(பிரதான) கருமங்களை உதாரணம் மூலம் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிகத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய உள்வாரி வெளிவாரித் தரப்பினர் இருவரை உதாரணம் மூலம் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

iii) அ) ரமணன் வணிகத்தினால் வாடிக்கையாளர் சார்பாக நிறைவேற்றப்படும் சமூகப் பொறுப்புக்கள் நான்கு தருக.

ஆ) சூழலின் நிலைபேறான தன்மைக்கு ரமணன் வணிகம் பங்களிப்புச் செய்யும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

iv) அ) அன்னபூரணி வணிகத்தில் காணப்படும் பின்வரும் பண்புகளை உதாரணம் மூலம் விளக்குக.

(i) விருப்பங்களைத் தோற்றுவித்தல்.

(ii) பொருளாதாரக் கருமமொன்றாக இருத்தல்.

ஆ) ரமணனின் வணிகம் அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் முறைகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v) ரமணன் எதிர்காலத்தில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுவாராயின்,

அ) அவர் ஆரம்பிக்கக் கூடிய வணிக அமைப்பு வகை யாது?

ஆ) நீங்கள் (அ) இல் குறிப்பிட்ட வணிக அமைப்பு வகையை ஆரம்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கு தருக.

இ) அவ்வணிகம் தொடர்பில் ரமணன் பின்வரும் விடயங்களில் பின்பற்ற வேண்டிய சட்டத்தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(1) வணிகம் பதிவு செய்யும் சட்டம் (2) வரி செலுத்துதல் *(04 புள்ளிகள்)*

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(02)*** பாடசாலை நண்பர்களான ரகுவும், ரவியும் இணைந்து (Best choice) பெஸ்ற் சொய்ஸ் அன்ட் கோ எனும் பெயரில் உள்ளூர் மூலப்பொருட்களை கொண்டு உற்பத்தி செய்யும் பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்றை நடாத்தி வருகின்றனர். தற்போது அரசானது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் முடிவுற்ற பாதணிகள் மீது தடை விதித்திருக்கின்றது.

i) அ) முடிவுற்ற பாதணிகள் மீதான அரசின் இறக்குமதிக்கட்டுப்பாட்டினால் ரகு ரவி வணிகத்தில் ஏற்படக்கூடிய சாதகமான தாக்கம் இரண்டு தருக.

ஆ) மேற்படி வணிகத்தில் அரசு செல்வாக்குச் செலுத்தும் முறைகள் நான்கு தருக.

*(04 புள்ளிகள்)*

ii) அ) ரகு ரவி வணிகத்தில் காணப்படும் விசேட பண்புகள் நான்கு தருக.

ஆ) மேற்படி வணிகத்துடன் தொடர்புபடும் சட்டங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

iii) எதிர்வரும் காலங்களில் குறித்த வணிகத்தை வரையறுத்த பொதுக்கம்பனியாக மாற்ற தீர்மானித்ததுடன் இன்னுமொரு பாதணி உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து வணிகத்தினை விரிவுபடுத்த எண்ணினார்.

அ) வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றின் பண்புகள் நான்கு தருக.

ஆ) (1) எதிர்காலத்தில் இணைய தீர்மானித்திருக்கும் வணிகச் சேர்க்கை முறையினைக் குறிப்பிடுக.

(2) மேற்படி வணிகச் சேர்க்கையின் அனுகூலங்கள் இரண்டு தருக.

*(04 புள்ளிகள்)*

iv)

அ) ரகு, ரவி முயற்சியாண்மைக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

ஆ) மேற்படி வணிகத்தினை ஊக்குவிப்பதற்கு அரசினால் மேற்கொள்ளக்கூடிய நிதி சார்ந்த ஊக்குவிப்புக்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v) இலங்கை மத்திய வங்கியானது தற்போது டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை நிலையாக பேணுவதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. உள்ளூர் நாணயத்தின் பெறுமதியை நிலையாக பேணுவதனூடாக வணிகங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

(5 x 4 = 20 புள்ளிகள்)

***(03)***

i)

அ) 'பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது' என்பது சிறந்த பணத்தின் ஒரு சிறப்பியல்பு ஆகும். ஆனால் பணமானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுமாயின் வேறு சில சிறப்பியல்புகளையும் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறான சிறப்பியல்புகள் நான்கு தருக.

ஆ) கடனட்டையானது (credit card) பிரபல்யமடைவதற்கு தடையாக அமையும் காரணிகள் இரண்டு தருக. *(04 புள்ளிகள்)*

ii)

அ) ரதன் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் வான் ஒன்றின் சாரதியாவார். இவர் தானே "பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை" ஒன்றை ஆரம்பிப்பதற்கு மோட்டார் வானொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு எண்ணுகின்றார். குத்தகை முறையில் ரதனுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிட்டுக் காட்டுக.

ஆ) காசோலை அடியிதழ் வணிகருக்கு ஏன் முக்கியத்துவமானது என்பதை விளக்குக.

*(04 புள்ளிகள்)*

iii)

அ) 'கடன் தரப்படுத்தல்' என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

ஆ) இலங்கையில் காணப்படும் கடன் தரப்படுத்தல் செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

இ) கடன் தரப்படுத்தல் நடவடிக்கைகளினூடாக வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக. *(04 புள்ளிகள்)*

iv)

அ) காசோலையொன்றில் கோடிடக் கூடிய பிரிவினர்களை பெயரிடுக.

ஆ) காசோலையொன்றின் குறுக்குக் கோடிடலை யாரால்? எவ்வாறு இரத்துச் செய்ய முடியும்?

*(04 புள்ளிகள்)*

v) றொபேர்ட், நிஹால் ஆகியோரினால் சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட பழப்பாகு உற்பத்தி வணிகமானது இன்று பாரிய பழங்கள் பதனிடும் தொழிற்சாலையொன்றாக மாறியுள்ளது. இதன்போது அவர்கள் முகம்கொடுக்கும் இடர்கள் நான்கினையும் அவற்றிற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய காப்புறுதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

***(04)***

i)

அ) 'செயற்கை நுண்ணறிவு' (Artificial Intelligence) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) செயற்கை நுண்ணறிவை சர்வதேச ரீதியாகப் பயன்படுத்தும் நிறுவனங்களின் பெயர் நான்கு தருக.

இ) செயற்கை நுண்ணறிவு மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

ii)

இலங்கையின் போக்குவரத்து முறையில் போக்குவரத்து ஊடகங்கள் நாளுக்கு நாள் நவீனமயப்படுத்தப்படும் தன்மை காணப்படுகின்றது. போக்குவரத்து முறைமையில் வினைத்திறனை உயர்த்துவதற்கு நவீன மயப்படுத்தப்பட்ட ஊடகங்களை மட்டும் ஈடுபடுத்துவது போதுமானதாக உள்ளதா? விளக்குக. *(04 புள்ளிகள்)*

iii)

அ) போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் சேவையின் அனுகூலங்கள் நான்கு தருக.

ஆ) களஞ்சியப்படுத்தல் செயன்முறையில் உள்ளடங்கும் விடயங்களைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

iv)

அ) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சர்வதேச வியாபாரத்திற்கு காணப்படும் தடைகளை இழிவுபடுத்தி அதன் இருப்பு நிலையை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் வலய ரீதியான வியாபார ஒப்பந்தங்கள் நான்கின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

v)

அ) வணிக நிறுவனமொன்று சர்வதேச சந்தையினுள் நுழைவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் நான்கு தருக.

ஆ) மொத்த வியாபாரத்தின் நவீன போக்குகள் நான்கு தருக.

*(04 புள்ளிகள்)*

## பகுதி ஆ

**(05)** சுரேஷ் என்பவர் வெப்தளங்களை உருவாக்கும் வணிகமொன்றின் உரிமையாளராவார். இவர் அதிக எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வெப்தளங்களை வடிவமைத்தலின் மூலம் மிகவும் பிரபலமானவர். வாடிக்கையாளர்க்கு ஏற்பவும், ஒவ்வொரு பணியார்களையும் கிட்டிய மேற்பார்வை செய்வதற்கேற்ற வகையிலும் நிறுவனக் கட்டமைப்பினை ஒழுங்கமைத்திருந்தார். மேலும் சேவையின் தரத்தினை உயர்த்துவதற்கேற்ற வகையில் கட்டுப்பாட்டு முறைகளையும், ஊழிய ஊக்கப்படுத்தல் தந்திரோபாயங்களையும் பயன்படுத்துகின்றார்.

i)

அ) நிறுவனக் கட்டமைப்பு என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) சுரேஷ் உருவாக்கிய நிறுவனக் கட்டமைப்பின் திணைக்களப்படுத்தும் வகையினை வரைபடம் மூலம் வரைந்து காட்டுக.

(04 புள்ளிகள்)

ii) அ) சுரேஷ் வணிகத்தில் காணப்படும் கட்டுப்பாட்டு விசாலத்தின் வகையினை வரைபடம் மூலம் விளக்குக.

ஆ) கட்டுப்பாட்டு விசாலத்தினை (Span of control) தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

iii) சுரேஷ் வெப்பதளங்களை உருவாக்குதல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தனக்கு கீழுள்ள பணியாளர்களின் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு மேற்கொள்கின்றாரெனின்,

அ) சுரேஷ் பின்பற்றும் தலைமைத்துவப் பாங்கினைத் குறிப்பிடுக.

ஆ) மேற்படி தலைமைத்துவப் பாங்கினால் பின்பற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.

இ) சுரேஷ் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தினை கீழ் மட்டத்தினருக்கும் வழங்கும் போது முகம் கொடுக்கும் சவால்கள் இரண்டு தருக.

(04 புள்ளிகள்)

iv) சுரேஷ் வெப்தளங்களை உருவாக்குவது தொடர்பில் பயன்படுத்திக் கொள்ள கூடிய மிகவும் பொருத்தமான உற்பத்தி முறையினைக் குறிப்பிட்டு அதில் காணப்படும் அனுகூலங்கள் மூன்று தருக.

(04 புள்ளிகள்)

v)

அ) "ஊழிய ஊக்கப்படுத்தல்" என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) ஊக்கப்படுத்தப்பட்ட ஊழியர்கள் மூலம் முகாமையாளருக்குக் கிடைக்கம் நன்மைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**(06)** பழப்பாகு உற்பத்தியினை மேற்கொள்ளும் வணிகமொன்றின் உயர்மட்ட முகாமையாளரான கமலன் நியமங்களின்றி வெற்றிகரமான கட்டுப்படுத்தற் செயன்முறையினை அமுல்படுத்த முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாதமும் உற்பத்தி, விற்பனை செய்யும் அலகுகள் தொடர்பாக முன்கூட்டியே தீர்மானித்ததுடன், எத்தகைய நியமங்களை பின்பற்றி உற்பத்தி செயன்முறையினை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல்களை பணியாட்களுக்கு வழங்கியிருந்தார். அத்துடன் உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்பார்வை செய்வதற்கென தனியாக மேற்பார்வையாளர்களை அமர்த்தியிருந்தார்.

**(07)**

i) அ) கமலன் குறித்த நிறுவனத்தின் உயர்மட்ட முகாமையாளர் என்ற வகையில் அவர் விசேடமாகக் கொண்டிருக்க வேண்டிய திறனைக் குறிப்பிட்டு, அதற்கேற்ற வகையில் அவரிடம் காணப்பட வேண்டிய ஆற்றல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

ஆ) சிறந்த தலைவர் ஒருவரிடம் இருக்கவேண்டிய பண்புகள் 4 தருக.

(04 புள்ளிகள்)

ii) அ) கட்டுப்படுத்தல் செயன்முறைக்கு நியமங்கள் ஏன் அவசியம் என்பதை விளக்குக.
ஆ) கமலன் பணியாற்றும் வணிகத்தினால் பின்பற்றப்படும் கட்டுப்பாட்டு நுட்ப முறையினைக் குறிப்பிடுக.
இ) மேற்குறித்த கட்டுப்பாட்டு நுட்பமுறையின் அனுகூலங்கள் இரண்டு தருக.

(04 புள்ளிகள்)

iii) அ) இலங்கை தரக்கட்டளை பணியகத்தின் நியமங்களுக்கமையவே குறித்த நிறுவனம் உற்பத்தியினை மேற்கொள்கின்றதெனின் அவர்களால் பின்பற்றப்படும் தரக்கட்டுப்பாட்டு நுட்ப முறையினைக் குறிப்பிடுக.
ஆ) தரம் என்பதை வரையறுக்க.
இ) தரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் நான்கு தருக.

(04 புள்ளிகள்)

iv) அ) குறித்த பழப்பாகு உற்பத்தி வணிகம் பயன்படுத்தக் கூடிய உற்பத்தித் தள அமைப்பினைப் பெயரிடுக.
ஆ) மேற்படி தள அமைப்பினை திட்டமிட்டு உருவாக்குவதனால் குறித்த வணிகம் அடைந்து கொள்ளும் நன்மைகள் மூன்று தருக.

(04 புள்ளிகள்)

v) கமலன் பழப்பாகு விற்பனையை தற்போது மேற்கொள்ளும் சந்தை பிரதேசத்திலிருந்து விஸ்த்தரிக்கும் நோக்கில் நாடு பூராகவும் விநியோகிக்கவும், வருமான, வயது மட்டத்திற்கேற்ப உற்பத்தியினை மேற்கொள்ளவும் தீர்மானித்தார்
அ) கமலன் வணிகத்தினால் பின்பற்றத் தீர்மானித்திருக்கும் சந்தைத் துண்டமாக்கலின் அடிப்படைகளைக் குறிப்பிடுக.
ஆ) கமலன் பயனுறுதி மிக்கதான சந்தைக் துண்டமாக்கலினை மேற்கொள்வதற்கான தேவைப்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

***(08)*** ஆடை உற்பத்தி நிறுவனமொன்று உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக சூரிய ஒளி மூலமான புதிய மின்சார முறைமையையும், உற்பத்தி தன்னியக்க முறைமையையும் மாற்றுத் தீர்வுகளாக இனங்கண்டது. இவற்றுள் ஏதாவது ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய தேவை நிறுவன முகாமைக்கு ஏற்பட்டது.


i) மேலே சம்பவத்தில் கூறப்பட்ட மாற்றுத் தீர்வுகளை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படும் நான்கு நியதிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

ii) அ) மேற்படி ஆடை உற்பத்தி நிறுவனத்தின் முகாமையாளர் எனக் கருதிக் கொண்டு தீர்மானமெடுத்தல். வகிபாகத்தில் நீர் ஏற்றுக் கொள்ள வேண்டிய உப வகிபாகங்கள் நான்கு தருக.
ஆ) மேற்படி ஆடை உற்பத்தி நிறுவனம் கணினி உதவியுடனான வடிவமைப்பினை மேற்கொள்ளும் போது பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் நான்கு தருக.

*(04 புள்ளிகள்)*

iii) அ) ஆடை உற்பத்தி வணிகம் கொள்வனவு செய்யும் பொருட்கள், சேவைகளுக்கு இவ்விரண்டு உதாரணம் தருக.
ஆ) மேற்படி நிறுவனம் பொருள் கொள்வனவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

iv) வணிகமொன்றின் பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை கணிப்பதற்கான வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. படத்தில் A, B, C, D என்னும் எழுத்துக்களால் குறிக்கப்படுபவற்றை எவை எனத் தருக.




*(04 புள்ளிகள்)*

v) அ) சம்பவத்தில் குறிப்பிட்ட ஆடை உற்பத்தி வணிகம் உற்பத்தித் திறனை மேம்படுத்தக் கூடிய முறைகள் நான்கு தருக.

ஆ) நவீன தொழில்நுட்பங்களைப் பயன்டுத்துவதன் மூலம் வணிகங்களுக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.

*(04 புள்ளிகள்)*

(மொத்தம் *20* புள்ளிகள்)

***(09)*** i) அ) முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் எண்ணக்கருக்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

*1.* இயங்கு வணிகச் சூழல் Dynamic Business Environment

*2.* நிறுவனம்/ ஒழுங்கமைப்பு Organization

ஆ) திட்டமிடலின் முக்கியத்துவம் நான்கு தருக *(04 புள்ளிகள்)*

ii) அ) நெறிப்படுத்தல் செயன்முறையின் மூன்று பிரதான கருமங்களையும் குறிப்பிடுக.

ஆ) சூழ்நிலைத் தலைமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது?

*(04 புள்ளிகள்)*

iii) அ) செயற்பாட்டு முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

ஆ) உற்பத்தி முறையொன்றை தெரிவு செய்யும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

iv) அ) இலக்கு சந்தை என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) பரிமாற்றம் ஒன்று முழுமையடைவதற்கு முக்கியமாக இருக்க வேண்டிய பண்புகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

v) அ) பொருளாதாரம் ஒன்றிக்கு சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் நான்கு தருக.

ஆ) வணிகம் ஒன்று சந்தையில் நிலைத்திருக்கக் கூடிய முறைகள் இரண்டு தருக.

*(04 புள்ளிகள்)*

(மொத்தம் *20* புள்ளிகள்)